செ.வெ.எண்:302 நாள்:08.05.2018

## பத்திரிக்கைச்செய்தி

----------------------------

திருநெல்வேலி மாவட்டம், அபிசேகப்பட்டி, மாவட்ட கால்நடைப்பண்ணையில் பராமரிக்கப்பட்டு கழிவு செய்யப்பட்ட 32 சிபிஜே பசுக்கள் 15.05.18 அன்று முற்பகல் 11.00 மணியளவில் ஏலக்குழுவினர் முன்பு பகீரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட உள்ளது. மேற்படி ஏலத்தில் கலந்து கொள்ள விரும்பும் பொது மக்கள் டேவணித்தொகையாகரூ.5000/- மதிப்பிலான தேசியமயமாக்கப்பட்ட வங்கி வரைவோலைகள் பெற்று 14.05.18 அன்று பிற்பகல் 4.00 மணிக்குள் மாவட்ட கால்நடைப்பண்ணை, துணை இயக்குநர் அலுவலகத்தில் சமர்ப்பிக்கபட வேண்டும். வங்கி வரைவோலை துணை இயக்குநர், மாவட்ட கால்நடைப்பண்ணை, அபிசேகப்பட்டி என்ற முகவரிக்கு எடுக்கப்பட வேண்டும். டேவணி தொகை வங்கி வரைவோலையாக மட்டுமே பெற்றுக்கொள்ளப்படும். மேலும் ஏலம் தொடர்பான விபரங்கள் தேவைப்படுவோர் மாவட்ட கால்நடைப்பண்ணை, துணை இயக்குநர் அலுவலகத்தில் நேரிலோ அல்லது 0462-2338759 என்ற தொலைபேசி எண்ணில் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளலாம். ஏலம் தொடர்பான நிபந்தனைகள் மற்றும் விபரங்கள் கால்நடை பராமரிப்புத்துறை, திருநெல்வேலி, மண்டல இணை இயக்குநர் அலுவலகம், உதவி இயக்குநர், கால்நடை பராமரிப்புத்துறை, அம்பாசமுத்திரம், தென்காசி, திருநெல்வேலி ஆகிய அலுவலக விளம்பர பலகைகளில் ஒட்டப்பட்டுள்ளது. எனவே பொதுமக்கள் மேற்படி ஏலத்தில் கலந்து கொண்டு பயன்பெற்றிடுமாறு மாவட்ட ஆட்சியர் கேட்டுக்கொள்கிறார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.**